# 12வது ஞானாச்சாரியார்
# ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியவை





12வது ஞானாச்சாரியார்

**புரட்டாசி மாத வெளியீடு**
**(October 2012)**
**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங் கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசாகப் பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவரின் அடியொற்றி இவருக்கு அடுத்துப் பீடாதிபதி யாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையில் வழங்குகின்றோம்.**

## உள்ளுறைத் தலைப்புக்கள்

**1. இந்து மறுமலர்ச்சி இயக்கம் (தோற்றம்: கி.பி.1772) கீழ் செயல்படும் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்கம்**

**2. "இந்து மறுமலர்ச்சி இயக்க வீரமுழக்கங்கள்"**

**3. "கடவுள் தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ், வேதத் தமிழ்." - வெளியீடு எண் 111.**

**4. பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்.**

# தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்க அறிமுகவுரை

*வழங்குபவர்: சித்தரடியார் இரா.சீனிவாசன்*

வரலாற்றுப் போக்கில் தனித்தனியாக தமிழினத்துக்கு, மொழிக்கு, மதத்துக்குத் தலைவர்கள் தோன்றி யிருக்கிறார்கள். ஆனால், இந்த மூன்று துறைகளுக்குமே சேர்ந்து ஒட்டுமொத்தமாகத் தலைமை தாங்கக் கூடிய தலைவராகப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளைத் தவிர வேறு எவரும் தோன்றியதில்லை. எனவே, நம் காலத்தில் தோன்றியிருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், பரபிறம்மம், நிறை யக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர் ... குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராரகிய குருதேவர் அவர்களை அனைத்துத் தமிழர்களும் தெரிந்து புரிந்து உணர்ந்து நம்பி அவரது தலைமையில் ஒன்றுதிரண்டு ஒற்றுமைப்பட்டு ஒருமைப்பட்டுச் செயல்படத் தயாராக வேண்டும். இசுரவேலர்களை விடுவிக்க வந்த மோசே போலத் தமிழர்களை விடுவிக்க வந்திருப்பவரே நமது குருதேவர்.

உலகம் முழுவதுமுள்ள அருளுலகப் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும் அகற்றிடத் தோன்றுபவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். எனவேதான், இவர்கள் சாதி, மத, இன, மொழி, நாட்டு வேறுபாடுகள் இல்லாமல் உலக மக்களின் அமைதிக்கும், நிம்மதிக்கும், நிறைவுக்கும், மகிழ்வுக்கும், சமாதானச் சக வாழ்விற்கும் உழைக்கக் கூடிய ஏட்டுலகத் தத்துவங்களையும் நாட்டு நடப்பியலுக்கு உரிய செயல் சித்தாந்தங்களையும் வழங்குகிறார்கள்.

'இந்து' என்ற ஒரு சொல்தான் நேரடியாக 'மனிதம்' என்னும் பொருளில் அடங்கக் கூடிய வாழ்விற்குரிய அன்பு, பற்று, பாசம், கனிவு, இனிமை, மென்மை, நட்பு, தோழமை, உறவு, ... முதலிய அனைத்தையும் வளத்தோடும், வாலிப்போடும், வலிவோடும், பொலிவோடும் போற்றிப் பேணி வளர்க்கும் ஆற்றலைத் தர வல்லது. இது எந்த ஒரு தனிப்பட்ட மதத்தையும் குறிக்காது. இது பேரழகும் கருத்தாழமும் உடைய பழந்தமிழ்ச் சொல்லாகும். எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்றால் 'உலக மானுட மறுமலர்ச்சி இயக்கம்' என்று பொருள் என்பதை

அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் பேருண்மைகளை விளக்கி நமது கோயில்களில் நிகழக் கூடிய அன்றாடப் பூசைகளின் முடிவிலும், விழாக்களின் துவக்கக் காலங்களிலும் கலந்துரை-யாடல்கள், விரிவுரைகள், பட்டிமன்றங்கள், கலை நிகழ்ச்சிகள் ...முதலியவை நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். இதற்குப் பாடுபட தமிழினத்து இளைஞர்களும், பெரியோர்களும்தான் முன்வர வேண்டும். ஏனென்றால், நடுத்தர வயதினர் அனைவரும் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களில் தங்களுடைய கண்ணையும், கருத்தையும், உழைப்பையும் செலவிட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவேதான், இந்தத் **‘தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்’** தமிழினத்து இளைஞர்களையும், பெரியோர்களையும் மட்டும் அதிக அளவில் உறுப்பினராக்கிட நேரடியாகச் சந்திக்க முயலுகின்றன.

**உலக அளவில் மானுட மறுமலர்ச்சி இயக்கமாக நமது ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’தான் செயல்பட முடியும். ஏனென்றால், தமிழர்களின் மெய்யான இந்துமதம்தான் எந்தவிதமான வெறியும் இல்லாமல் ஒரு சமுதாய நெறியாக இருக்கிறது**. [The Indhuism of the Tamils alone does not have the religious fanaticism; And also it is existing only as a Social Philosophy and as a Social Science] மேலும், உலக மதங்களுக்கு மூலமாகவும், முதலாகவும், தாயாகவும், கருவாகவும் இருக்கின்ற தமிழருடைய சித்தர்நெறி எனப்படும் சீவநெறியான இந்துமதத்தின் அருளுலக வாரிசுகளாக, விதைமுதலாக, கருவறை மூலவர்களாக, நாற்றுப் பண்ணைகளாக, விதைப் பண்ணைகளாக இருப்பவர்கள் தமிழர்கள்தான், தமிழர்கள்தான், தமிழர்கள்தான். [The Tamils are the chosen people of the Divine World of the Inter-cosmic Universes including this world. Since, they are the descendants of the Pathinen Siddhars who are the masters of the whole Universe including cosmic and non-cosmic universes]. எனவே, தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டே ஆக வேண்டும்! தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டே ஆக வேண்டும்! தமிழர்கள் அனைவரும் ஒருமைப் பாட்டுடன் செயல்பட்டே ஆக வேண்டும்!

அம்மாபெரும் முயற்சியைத்தான் **‘இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்’** கீழ் செயல்படும் **‘தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்’** மேற்கொண்டிருக்கின்றன. எனவே, இந்தத் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் இந்தச் சுருங்கிய வடிவக் கொள்கை விளக்கக்

குறிப்பேட்டுப் புத்தகத்தை அனைவரும் ஆர்வத்துடன் படித்தும், பிறருக்குப் படித்துக் காட்டியும் செயல்பட வேண்டுமென்று தலைமைப் பீடப் பணியாளர்களும், தலைமைப் பீடச் செயலகப் பணியாளர்களும், இ.ம.இ.; அ.வி.தி.யின் மண்டல நிர்வாகக் குழுவினர்களும், அ.வி.தி. செயல் வீரர்களும், இ.ம.இ.யின் நிறுவன நிர்வாகத்தைச் சேர்ந்த அனைவரும் இரு கை கூப்பி இந்த வேண்டுகோளை விடுத்துக் கொள்கிறோம்.

**வளர்க தமிழ்!**

**வாழ்க தமிழர்கள்!**

**வெல்க அருளாட்சி அமைப்புப் பணி!**

**ஓங்குக உலக ஒற்றுமை! நிலவட்டும் உலகச் சமாதானம்!**

**பயிராகட்டும் உலகச் சமத்துவம்!**

**நிறைவு பெறட்டும் உலக அமைதிப்பணி!**

**‘தமிழின விடுதலையே உலக இனங்களின் விடுதலை’**

**‘தமிழ்மொழி விடுதலையே உலக மொழிகளின் விடுதலை’**

# தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்கம்

இம் மண்ணுலக அகப் பண்பாடுகளுக்கும் புற நாகரீகங்களுக்கும் அடிப்படையான மதங்களின் மூல மதமான ‘மெய்யான இந்துமதமே’ தமிழருடைய மதம். இம் மதம், அறியாமைகளாலும், புரியாமைகளாலும், தெரியாமைகளாலும் பல்வேறு பிரிவுகளையும், திரிபுகளையும், மாற்று வடிவங்களையும், சிதைவுகளையும், மொழியாட்சிகளையும் பெற்றுவிட்டது. அதனால், இது மயங்கித் தேங்கிச் செயல்நலம் குன்றிவிட்டது; அன்னியர்களின் வேட்டைப் பொருளாகி விட்டது. இதனால், இம்மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள திராவிட இனத்தவர்களும்; மூல இனத்தவரான தமிழினத்தவரும் தங்களுடைய மொழி, வரலாறு, இலக்கியம், வாழ்வியல், ... முதலிய அனைத்தையும் தெரியாமல், அறியாமல் அனாதை நிலையையும், நாடோடி நிலையையும் பெற்று விட்டனர்.

இம்மாபெரும் வீழ்ச்சியாலும், தாழ்ச்சியாலுமே உலக ஆன்மீகத் துறை, சமயத்துறை, மெய்ஞ்ஞான அறிவு, மத உணர்வு, பத்திநெறி, இறையியல் கலை, வேதாகமப்

பயிற்சி, அருளார்ந்த வாழ்வு, உலக மத ஒற்றுமை, உலக மானுட இனப்பற்று, உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயப் போக்கு, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுப் போக்கு, ... முதலிய அனைத்தும் மேய்ப்போன் இல்லாத மந்தையாக, மாலுமித் தலைவன் 'கலபதி' இல்லாத கப்பல் போல, சேனாதிபதி இல்லாத சேனை போல, அரசனில்லாத நாடு போல, ஆசிரியர் இல்லாத மாணாக்கர் போல, ... நிலைகுலைந்து செயலிழந்து நிற்கின்றன. எனவே, உலகம் தழுவிய செழிப்பு, ஒற்றுமை, அமைதி, நிறைவு, நிம்மதி, சகோதரத் தத்துவம், பொதுவுடமை, சமாதானம், கூட்டுறவு ... முதலியவைகள் ஏற்படுவதற்காகத் தமிழினம் தனது தாழ்ச்சி நிலைகளிலிருந்து மீட்சி பெற்றிட வேண்டும். அதாவது, பதினெண்சித்தர்களால் இம் மண்ணுலக அருளியலுக்கும், அறிவியலுக்கும், பொருளியலுக்கும் மூல தாயகங்களாகவும், தத்துவ வித்துக்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டு விட்ட தமிழர்கள் அடிமை நிலை! மிடிமை நிலை! கூலி நிலை! போலி நிலை! தன்மானமற்ற நிலை! இனமான உணர்வற்ற நிலை! மொழியுரிமை யுணர்வற்ற நிலை! இன விடுதலை யுரிமை உணர்வற்ற நிலை! அகப்பண்பாட்டுப் பிடிப்பற்ற நிலை! புற நாகரீகப் பற்றற்ற நிலை! ... முதலியவை களிலிருந்து மாற்றம் பெற்றுப் பண்டைய பைந்தமிழர் போன்று மொழியினப் பண்பாட்டு நாகரீகப் பற்றும், பாசமும், பிடிப்பும், உரிமையுணர்வும், பெருமித உணர்வும், விடுதலை யுணர்வும் உடையவர்களாகிடல் வேண்டும்.

இதைத்தான் கடந்த 43,73,089 ஆண்டுகளாகப் பதினெண் சித்தர்களின் 'சித்தர்நெறி' யெனும் சீவநெறியான 'மெய்யான இந்துமதம்' வலியுறுத்தி வளமாக வாழ்க்கைப் படுத்தி வருகின்றது. இப் பேருண்மையையே, 'ஆறுவகையான வாக்குகள்', 'ஆறுவகையான வாக்கியங்கள்', 'ஆறுவகையான வாசகங்கள்', 'பதினேரு பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் குரு பாரம்பரியங்கள்' (The Religious History), 'இலக்கிய பாரம்பரியங்கள்' (The Social History and the History of the Language and Literature), 'அரச பாரம்பரியங்கள்' (The Political History); 'நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களின் நூல்கள்' ... முதலியன விளக்குகின்றன. எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ்; 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழர் மத விடுதலை இயக்கம்' எனும் முப்பெரும் இயக்கங்கள் செயல்படுகின்றன. இதில் பங்கு பெற்று உலக நன்மைக்காக அனைத்துத் துறை விடுதலைக்காகப் பாடுபட அழைக்கிறோம்.

“தமிழ்மொழி விடுதலையே உலக மொழிகளின் விடுதலை”

“தமிழ்மொழியின் மறுமலர்ச்சியே உலக ஆன்மீக மறுமலர்ச்சி”

“தமிழ்மொழியின் வளவளர்ச்சியே உலகச் சமய வளவளர்ச்சி”

“தமிழின விடுதலையே உலக மானுட இனங்களின் விடுதலை”

“தமிழின விழிச்சியே உலகச் சகோதரத் தத்துவ விழிச்சி”

“தமிழின எழிச்சியே உலக மானுட உரிமை எழிச்சி”

“தமிழினச் செழிச்சியே உலகப் பண்பாட்டுச் செழிச்சி”

“தமிழின ஒற்றுமையே உலக மானுட ஒற்றுமை”

“தமிழர் மத விழிச்சியே உலகச் சமாதான மலர்ச்சி”

“தமிழர் மத எழிச்சியே உலக நாகரீக மறுமலர்ச்சி”

“தமிழர் மதச் செழிச்சியே உலக மானுடர் உரிமை மீட்சி”

“தமிழர் மத மீட்சியே உலக அருளாட்சி உயர்ச்சி”

“தமிழா! விழித்தெழு! உன் வரலாறுகளைத் தெரிய முற்படு! உன் வளமிகு மொழிச் செல்வங்களை அறிய முற்படு! உன் சமுதாயப் பண்பாடுகளைப் புரிய முற்படு! உன் அரசியல் நாகரீகங்களை உணர முற்படு! ... உனக்கு வழிகாட்ட உன்னுடைய சமயம் காத்திருக்கிறது ... புரிந்து, **இந்து மறுமலர்ச்சி இயக்கத்**தில் சேர்ந்து செயல்பட்டிட வந்திடு!

“இவ்வுலகுக்கே வழிகாட்டவும், வழித்துணையாக வாழ்ந்திடவும், வழிப்பயணுகத் திகழ்ந்திடவும் இம் மண்ணுலகின் மூத்த முதல் குடியான தமிழ்க் குடியே தயாராக வேண்டும்”... என்று இந்து மதத்தை இம்மண்ணுலகின் மூல முதல்மதமாகத் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடாதிபதிகள் கூறுகிருர்கள். குருபாரம்பரியமும், அரச பாரம்பரியமும், இலக்கிய பாரம்பரியமும் கொண்டு தமிழின மொழிமத விடுதலை இயக்கங்கள் செயலாற்றுகின்றன. இனியும் தயங்காது தமிழர்களே திரண்டிடுவீர்!

**தமிழ்மொழி விடுதலை இயக்கம்,**

**தமிழின விடுதலை இயக்கம்,**

**தமிழர் மத விடுதலை இயக்கம்**

# “தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் ஏன்? எதற்காக?” ஒரு சுருக்க விளக்கச் செயல்திட்டம்

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைக் கட்டிக் காக்கும் ஓர் உள்ளமைப்பாகத்தான் ‘தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்’ இருந்திடும். ஏனென்றால், பெரும்பாலான தமிழர்கள்; ‘இந்து’ என்ற சொல்லையே வெறுக்கின்றூர்கள். எனவேதான், அனைவரும் விரும்பும் வண்ணம் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூறூர் (கி.மு.100-கி.பி.150) தோற்றுவித்துச் செயலாக்கிய த.இ.மொ.ம.வி. இயக்கங்கள் மீண்டும் தோற்றுவிக்கப் படுகின்றன. இதே இயக்கங்கள்தான், பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் (கி.பி.785-கி.பி.1040) அவர்களைப் பிற்காலச் சோழப் பேரரசு என்ற ஓர் அருட்பேரரசை உருவாக்கிட உதவின.

தமிழ்மொழி விடுதலை இயக்கத்தின் மூலம் மொழி உணர்ச்சிக்காகவும், மொழி உரிமைக்காகவும், மொழிவழிச் சிந்தனைக்காகவும், மொழி வளவளர்ச்சிக்காகவும் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும். இன்று நமது நாட்டில் சமசுக்கிருத மொழி வளர்ச்சிக்காக அடையாறு நூலகம் (Theosophical Society’s Adyar Library, Madras) போன்று பல அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. அதுபோல், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஒரே ஒரு நூலகமாவது அல்லது அமைப்பாவது உருவாக்கப்படல் வேண்டும். அதன்மூலம், தமிழ் இலக்கியப் பெருமை, உரிமை, சிறப்பு, ... ஆகியன பரப்புதல்; தமிழில் உள்ள பழைய இலக்கியங்களுக்குச் செல்வாக்கு வளர்த்தல்; தமிழில் புதிய இயக்கங்களைத் தோற்றுவித்தல் ... போன்ற அரிய பெரிய பணிகளைச் செயலாக்க வேண்டும். இவற்றிற்காக, தமிழ்ச் சங்கம், தமிழ் நாடக மன்றம், தமிழ்க் கவிதை அரங்கம், தமிழ் இன்னிசைச் சங்கம், ... முதலிய அமைப்புக்களைத் தமிழருக்காக ஏற்படுத்தி; அதன்மூலம் பெரும்பாலான தமிழர்களை ஈர்த்துச் செயல்படச் செய்து தமிழ்மொழி விடுதலையைக் காணவேண்டும்.

தமிழின மத விடுதலை இயக்கங்களின் மூலம் தமிழின வரலாறு, தமிழர் நாகரீகம், பண்பாடு ... முதலியவைகளை விளக்கியுரைத்து, தமிழின ஒற்றுமையையும் ஒருமைப்

பாட்டையும் உருவாக்க வேண்டும். தேவ குமாரரான ஏசு, இசுரவேலர்களின் விடுதலைக்காகத்தான் பாடுபட்டார். அதற்காகவே, விவிலிய நூல் (The Bible) உருவாக வழி செய்தார். ஆனால், அந்த நூல் உலக மானுட நலத்திற்குப் பயன்படும் ஒன்றாக உள்ளது. தேவகுமாரர் ஏசுவும் உலக மானுடரால் வழிபடப் படுகின்றார். அவருடைய கொள்கை ஒரு மாபெரும் மதமாகவே மாறிவிட்டது. ஆனாலும், இசுரவேலர்கள் (The People of Israel) அருளுலகத்தின் மூலவர்கள் என்றோ, காவலர்கள் என்றோ கருதப்படுவதில்லை. அப்படிக் கூறும் மறைவாக்கோ, அருள்வாக்கோ இல்லை. இதேபோல், முகம்மது நபி அவர்கள் தம்முடைய அராபிய இனத்து மக்களின் அறியாமையைச் சீர்திருத்தத்தான் தேவதூதர்களின் அறிவுரையைப் பெற்று அதன்படிச் செயல்பட்டார். அவர்களுடைய வேதநூலான 'திருக்குரான்' தோன்றுவதற்கும் காரணமாயிருந்தார். ஆனால், அவர் உலகத்திலுள்ள பல்வேறு இனமக்களுக்கும் கடவுளாகவே ஆகிவிட்டார். முகம்மது நபி அராபியர்களுக்கு வழங்கிய மதச் சீர்திருத்தக் கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவி தனியொரு மதமாகவே ஆகிவிட்டது. அவர் தம்முடைய அராபிய இன மக்களுக்குக் கூறிய சடங்குகளும், சாத்திறங்களும் உலகிலுள்ள எல்லா இனமக்களும் கடைப்பிடிக்கக் கூடியனவாகி விட்டன. ஆனால், அராபியர்கள்தான் அருளுலகத்தின் மூலவர்கள், காவலர்கள் என்று அருள்வாக்கோ, மறைவாக்கோ இல்லை. ... இவற்றோடு எண்ணிப் பார்க்குபோது, இம்மண்ணுலகின் முதல் மதம், மூலமதம், தாய்மதம் எனப்படும் பதினெண்சித்தர்களின் அண்டபேரண்டமாளும் 'சித்தர்நெறி'யெனும் 'சீவநெறி'யான மெய்யான இந்துமதத்தில் உள்ள 1359 நூல்களும் தமிழர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வித்துக்கள், விதைப்பண்ணைகள், நாற்றங்கால்கள், நாற்றுப்பண்ணைகள்... என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

இன்னும் சொல்லப்போனால், பதினெண்சித்தர்களின் 'வாக்குகள்', 'வாக்கியங்கள்', 'வாசகங்கள்', 'பாரம்பரியங்கள்', 'மறைகள்', 'முறைகள்', 'நெறிகள்', 'வேதங்கள்', 'நாதங்கள்', 'சித்தங்கள்', 'போதங்கள்', 'ஓதங்கள்', 'அத்திறங்கள்', 'சாத்திறங்கள்', 'சூத்திறங்கள்', 'தோத்திறங்கள்', 'நேத்திறங்கள்', 'வேத்திறங்கள்', ... எனப்படும் அனைத்திலுமே மிகமிகத் தெளிவாகவும், நேரடியாகவும் இந்த உலகின் முதல் நிலமான இளமுறியாக் கண்டத்து மக்களான தமிழர்களால்தான் மேலுள்ள ஏழுலகங்களுக்கும், கீழுள்ள ஏழுலகங்களுக்கும் தொடர்புகளை உண்டாக்கி அருட்பயிரின உயிரினங்களை வாழையடி

வாழையாக வளர்க்க முடியும் என்று கூறப்படுகின்றன.

இவ்வளவு தெளிவாகக் கூறப்பட்டிருந்தும், தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை இல்லை; இன நம்பிக்கை இல்லை; இன ஒற்றுமை உணர்வு இல்லை; இனப்பற்றுமிகு பாச உணர்வு இல்லை; இனத் தனித்தன்மை காக்கும் விடுதலை உணர்வு இல்லை. இவற்றால், தன்மான உணர்வும் இல்லாமல் போய்விட்டது. அதனால், தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழிதான் 'அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி' என்ற பேருண்மையைத் தெரிந்திருந்தும் அதனிடம் பற்றோ, பாசமோ, பெருமையோ, உரிமையோ, ஈடுபாடோ காட்டத் தெரியாத அப்பாவிகளாக இருக்கிறார்கள் தமிழர்கள். இந்த நிலைகளுக்கெல்லாம் காரணம்; இவர்கள், தங்களுடைய மெய்யான இந்துமத வரலாறுகளையும், இலக்கியங்களையும், வாழ்வியல் நடைமுறைகளையும் தேவையான அளவு கூடத் தெரிந்து புரிந்து கொள்ளாததுதான். எனவே, இம்மண்ணுலகத்தின் அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும் உரிமை பெற்றுள்ள நமது தமிழக மக்களைத் தகுந்த ஏட்டறிவாலும், பட்டறிவாலும் தயாரிக்க வேண்டும். அதற்குரிய அனைத்து வகையான செய்திகளும், கருத்துக்களும் இந்தத் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் மேடைகளில் வழங்கப்படும்.

குறிப்பு:- தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் **இன்றைய நிலையில் தமிழ்நாட்டு விடுதலையைக் கேட்கவில்லை. ஏனெனில், இது ஒரு பிரிவினைவாத இயக்கம் அல்ல.** இது, முழுக்க முழுக்கத் தத்துவவாதிகளாலும், சித்தாந்தவாதிகளாலும் நடத்தப்படும் ஒரு மத மறுமலர்ச்சி இயக்கம்! சமுதாயப் பண்பாட்டு எழிச்சி இயக்கம்!! மொழி வளவளர்ச்சி இயக்கம்!!! தன்மானச் செழிச்சி இயக்கம்!!! தத்துவ வழியாக 'ஒரு முழுமையான சித்தாந்தப் புரட்சி'யை விளைவிக்க விரும்பும் ஆன்மீக இயக்கம்!!! தமிழர்களை மொழியுணர்வு, இன உணர்வு, மத உணர்வு, இனப்பற்றுணர்வு, ஒற்றுமையுணர்வு பெற்றவர்களாக்கும் தமிழர் நல்வாழ்வு இயக்கம்....

ஒவ்வொரு தமிழனும், 'தமிழின மொழிமத விடுதலை' பற்றிய சிந்தனைகள் எப்படிப் பிறந்தன? எதற்காகப் பிறந்தன? என்ன எதிர்பார்த்துப் பிறந்தன? ... என்று அடுக்கடுக்காக வினாக்களை எழுப்பிச் சிந்திக்க வேண்டும்!

ஒவ்வொரு தமிழனும், 'தமிழின மொழி மத விடுதலை' பற்றிய சிந்தனைகள் எப்படிப் பிறந்து வளர்ந்தன; வளமும் வலிமையும் பெற்றன; எப்படித் தனித்தனி இயக்கங்களாக வடிவெடுத்தன

என்பதற்குரிய எண்ணற்ற செய்திகளில் சில மட்டும் ஈண்டு குறிக்கப் படுகின்றன.

கி.மு.100 முதல் கி.பி.150 வரை வாழ்ந்த **பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூரார்** அவர்கள்தான்; முதன்முதலில் தம் காலத்தில் அன்னியரால், அன்னியமொழியால் தமிழர் மதமான பதினெண் சித்தர்களின் 'சித்தர் நெறி'யெனும் 'சீவநெறி'யான 'இந்துமதம்' சிதைந்து சீரழிந்து விட்டதென்றும்; அதற்காகவே, **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற அமைப்பும், அதன்கீழ் நாற்பத்தெட்டு வகையான அமைப்புக்களும் தோற்றுவிக்கப் பட்டன** என்றும் எழுதுகிறார். அப்படி அவர் இ.ம.இ.யின் கீழ் தோற்றுவித்த அமைப்புக்களுள் இந்தத் 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழர் மத விடுதலை இயக்கம்' என்ற அமைப்புக்களும் இருக்கின்றன.

கி.பி.785 முதல் கி.பி.1040 வரை வாழ்ந்த பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் தம் காலத்திய மத, மொழி, இன உணர்வு விழிச்சிக்காகவும், எழிச்சிக்காகவும், செழிச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியைப் பின்பற்றித் 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழர் மத விடுதலை இயக்கம்' என்ற மூன்றையும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் தோற்றுவித்துத்தான் **'தமிழின அருட்பேரரசு'** (The Divine Empire of the Tamils 785AD to 1279AD) ஒன்றினை உருவாக்கினார்.

இன்றைக்கு இந்துமதத் தந்தையாக, குவலய குருபீடமாக, தமிழின ஆச்சாரியாராக, தமிழினக் குருதேவராக, தமிழ்மொழித் தலைவராக, தத்துவ நாயகமாக, அருளாட்சி நாயகமாக, நான்குயுக நாயகமாக, கருவறை மூலவர்களின் அம்மையப்பராக, நிறையக்ஞராக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, ஞானாச்சாரியாராக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, ... வாழும் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களும் எவ்வளவோ செயல்பட்டும் **'தமிழர்களைத் தமிழராக்க முடியவில்லை! முடியவில்லை!! முடியவில்லை!!! முடியவே இல்லை!!!!'** எனவேதான், தமக்கு முன் வாழ்ந்த இரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் தமிழர்களைத் தமிழராக்கிடத் தோற்றுவித்த 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழர் மத விடுதலை இயக்கம்' என்ற மூன்று

இயக்கங்களையும் மீண்டும் இப்பொழுது துவக்கியுள்ளார். இப்பேருண்மைகளை எண்ணிப் பார்த்துத் தமிழர் அனைவரும்; **இம்மூன்று இயக்கங்களையும் ஒரே தலைமைக்குக் கட்டுப்பட்ட மூன்று பெரும் தனித்தனி இயக்கங்களாக வளர்த்திடல் வேண்டும்**.

இன்றைக்கு 'தமிழின மொழி மத விடுதலை இயக்கம்' என்ற தலைப்பில் மூன்று இயக்கங்களையும் ஒரே இயக்கமாக நடத்தும் நிலையே நமது தமிழர் நிலை. எனவே நம்மவர்கள் நமது இனப் பெருமை, மொழிப் பெருமை, மதப் பெருமை முதலியவற்றில் சிலவற்றையாவது தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், ஊக்க உணர்வும், உற்சாக உணர்வும், ஒற்றுமை உணர்வும், நம்பிக்கை யுணர்வும் என்றென்றும் இந்த மூன்று இயக்கங்களிலும் பசுமையாகவே தழைத்துக் கொண்டிருக்கும்.

# தமிழினப் பெருமைகளுள் சில:-

(1) தமிழினம்தான், இம்மண்ணுலகில் தோன்றிய முதல் இனம், மூத்த இனம்.

(2) இம்மண்ணுலகுக்கு அடிக்கடி அண்ட பேரண்டங்களிலிருந்து வந்து சென்று; இம்மண்ணின் ஈசர்களான (தலைவர்களான மண் + ஈசன் = மணீசன்) 'மணீசர்'களை பண்படுத்தி 'மனிதர்'களாக்கிய பதினெண் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்களும், நாற்பத்தெட்டு வகையான அருளாளர்களும்... இம்மண்ணுலகில் முதன்முதல் தோன்றிய இனமான தமிழினத்தையே 'அருளுலக மூலமாக', 'அருளுலக முதலாக', 'அருளுலக விதைப் பண்ணையாக', 'அருளுலக வாரிசாக' என்றென்றும் விளங்கிடத் தேர்ந்தெடுத்து வாழ்த்தி அருளினர்கள். எனவே, இம்மண்ணுலகில் **"அருளுலகுக்கே உரிய இனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இனம் தமிழினம்தான்"**.

(3) இம்மண்ணுலகின் தெய்வீக இனமான தமிழினம், என்றென்றும் விடுதலையுடையதாக; தன்மானம் மிக்கதாக; தன்னம்பிக்கை நிறைந்ததாக; வளமான ஒற்றுமை யுடையதாக என்றென்றும் காக்கப் பட்டேயாக வேண்டும்.

(4) தமிழினம்தான் அருளுலகத்தின் அனைத்து வகையான மானுட இன உய்வுப் பிறச்சினைகளுக்கும், உயர்வுப் பிறச்சினைகளுக்கும் வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக... இருக்கமுடியும்.

(5) பதினெண்சித்தர்கள் தங்கள் சொந்த இனமான தமிழினத்திற்காக மட்டும் செயல்படக் கூடிய குறுகிய **இனவெறியர்கள்** அல்லர் என்பதை விளக்கிட; பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூரார் அவர்களின் குருபாரம்பரிய வாசகத்தைக் குறிப்பிடுகிறோம். "... இம் மண்ணுலகின் அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கின்ற செந்தமிழர்கள் தங்களுடைய சொந்த இனத்தின் அருமை, பெருமை, உரிமை, அரிய தெய்வீகத் தன்மை... முதலியவைகள் எல்லாம் தெரியாமல் அடிமைப் பட்டுக் கிடக்கின்றார்களே என்ற ஆதங்கத்தால்; இவர்களின் இன விடுதலைக்காகத்தான் யாம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும் அதன்கீழ் நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிருவாகங்களையும் உருவாக்குகின்றோம். ஏனென்றால் இந்தத் தமிழின விடுதலைதான் உலக இனங்களின் விடுதலையையும், உலக மதங்களின் விடுதலையையும், உலக மொழிகளின் விடுதலையையும், உலக மானுடப் பண்பாட்டின் விடுதலையையும் உருவாக்கித் தரும். மானுடர்க்குள் எதன் பெயராலும், எவரையும், யாரும் அடிமைப்படுத்தக் கூடாது, சுரண்டக்கூடாது, ஏமாற்றக் கூடாது என்பதுதான் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத் தத்துவமும் சித்தாந்தமும் ஆகும். அதனைச் செயலாக்குவதற்காகத்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு இயக்கம் என்றும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் இயக்கம் என்றும் ... இந்து மறுமலர்ச்சி இயக்கம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும் என்று; பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம் குருவாணை யிட்டே இக் குருபாரம்பரிய வாசகத்தை எழுதுகின்றோம்.

# தமிழ்மொழிப் பெருமைகளுள் சில:-

(1) இம்மண்ணுலகில் வாழும் மனிதர்களால் பேசப்படுகின்ற மொழிகளிலேயே முதல்மொழியாக அனைத்து மொழிகளுக்கும் தாய்மொழியாக (அனைத்து மொழிகளின் ஒலிகளையுடைய ஒரே மொழியாக) விளங்குவது இத் தமிழ்மொழிதான்.

(2) இத் தமிழ்மொழியில்தான் உயிரெழுத்து, மெய்யெழுத்து,

உயிர்மெய்யெழுத்து, ஆயுத எழுத்து என்று பல்வேறு வகையான எழுத்துக்கள் இருக்கின்றன.

(3) இந்தத் தமிழ்மொழிதான் பல நூருயிரக் கணக்கான ஆண்டு-களாகியும் எழுத்து மொழியும் (The Literary Language or Diction), பேச்சுமொழியும் (The Conversational Language or Diction) ஒரே மாதிரியாக இருக்கக் கூடிய சிறப்பைப் பெற்றிருக்கின்றது.

(4) இந்தத் தமிழ்மொழியில்தான் ஆரம்பக் காலம் முதல் இன்றுவரை இடைவிடாமல் தொடர்ந்து அருளாளர்கள் தோன்றி அருளூறும் வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும் வழங்கி வருகிருர்கள்.

(5) இந்தத் தமிழ்மொழிதான் ‘அருள்மொழி’, ‘ஆண்டவர்மொழி’, ‘இறைமொழி’, ‘உயிர்மொழி’, ‘உயிர்ப்புமொழி’, ‘எல்லாமொழி’, ‘கடவுள்மொழி’, ‘தெய்வமொழி’, ‘தேவமொழி’, ‘மாருத இளமையுடைய கன்னிமொழி’, ‘அமுதத் தமிழ்மொழி’, ‘செந்தமிழ் மொழி’, ‘பைந்தமிழ் மொழி’, ‘வண்டமிழ் மொழி’ என்றெல்லாம் பாராட்டப்படுகிறது.

(6) இந்தத் தமிழ்மொழிதான் பதினெண்சித்தர்களால் ‘அண்ட பேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழி’ என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

# தமிழர் மதமான இந்துமதப் பெருமைகளுள் சில:-

(1) தமிழர்களின் மெய்யான இந்துமதத்தில்தான் மனிதன் கடவுளாகும் வழிவகைகள் இருக்கின்றன.

(2) தமிழர் மதத்தில்தான் மனிதப் பிறவி புனிதப் பிறவியாக நினைத்துப் போற்றப் படுகின்றது.

(3) தமிழர் மதத்தில்தான் பெண்களுக்கு எல்லா வகையான மதிப்பும், மரியாதையும், உரிமையும் தரப்பட்டு அவர்கள் தெய்வங்களாகவே போற்றப் படுகின்ருர்கள்.

(4) தமிழர் மதத்தில்தான் எல்லாவகையான பயிரினங்களும், உயிரினங்களும் கடவுளாக்கப் பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன.

(5) தமிழர் மதத்தில்தான் அனைத்து வகையான சாபங்களுக்கும், பாவங்களுக்கும், தவறுகளுக்கும், தீய செயல்களுக்கும் பரிகாரங்கள் இருக்கின்றன.

(6) தமிழர் மதத்தில்தான் விரும்பியவர்கள் விரும்பிய கடவுள்களை, விரும்பிய விதத்தில், விரும்பியபோது மட்டும் வழிபட்டுப் பூசைசெய்து கொள்ளலாம் என்ற தனிமனிதச் சுதந்திரம் இருக்கின்றது.

(7) தமிழர் மதத்தில்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்து மதங்களையும், மதத் தலைவர்களையும், மத வழிபாட்டு நிலையங்களையும், மத நூல்களையும் இழிக்காமல், பழிக்காமல், எதிர்க்காமல், அழிக்க முற்படாமல் ஏற்றுப் போற்றும் பண்பாடும், தத்துவமும், சித்தாந்தமும் இருக்கின்றன.

(8) தமிழர் மதத்தில்தான் பத்தர்கள் அல்லது பத்தியாளர்கள் கடவுளைத் தங்களுடைய தாயாக, தந்தையாக, காதலனாக, காதலியாக, சேவகனாக, சேவகியாக, தோழனாக, தோழியாக, அடிமையாக ... முதலிய எல்லா நிலைகளிலும் நினைத்து வழிபட்டிட உரிமை இருக்கின்றது.

(9) தமிழின மொழிமத விடுதலை இயக்கம்தான் எல்லாக் கட்சிக் காரர்களையும், எல்லா இயக்கத்தவர்களையும் தம்மோடு இணைத்து ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டோடும் செயல் பட்டிடும். இதன் தலைமையில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப் பட்டேயாக வேண்டும். குறிப்பாக, மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும், அரசியல் கட்சிகளின் பெயராலும்தான் இன்றைக்குத் தமிழர்களிடையில் பெரிய சிறிய பிரிவுகளும், போட்டா போட்டிகளும், போட்டி பொறாமைகளும், வெறிச் செயல்களும், நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை யெல்லாம் முறியடிக்க வேண்டு மென்றால்; தமிழர்களுக்குத் தமிழ்மொழி யுணர்வும், தமிழின உணர்வும், தமிழர் மத உணர்வும் ஏற்பட்டுத் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் ஒருமைப் பாட்டுடனும் செயல்படக் கூடிய பொற்காலம் உருவாக வேண்டும். அந்த நற்காலத்தை உருவாக்குகின்ற ஆற்றல் 'தமிழின மொழிமத விடுதலை இயக்கங்கள்' என்ற முப்பெரும் இயக்கங்களின் முக்கூட்டு அமைப்பிற்குத்தான் உண்டு. ஏனென்றால், தமிழர்களுக்குத் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, இனமான உணர்வு, இனப் பற்றுணர்வு, பண்பாட்டுணர்வு, நாகரீக ஈடுபாட்டுணர்வு, தமிழிலக்கிய உணர்வு, தமிழ் சார்ந்த கலைகளின் மீது பற்றுணர்வு, ... எனப்படும் இன்றியமையாத உணர்வுகள் நன்கு கிளைத்துச் செழித்து வளமாக வளர்ந்து கொழுத்த பயனைத் தரவேண்டும். அதற்கு, அவர்கள், சாதி வெறியையும், அரசியல் கட்சிவெறியையும், பிற மத வெறிகளையும் வென்றாக வேண்டும். அதற்கு அவர்களுடைய அறிவு நிலையில் மிகுந்த தெளிவும், வலிவும், பொலிவும் ஏற்பட வேண்டும். அதாவது, 'சாதி என்பது ஆதியிலிருந்து இல்லை'; சாது + ஆதி = சாதி -> சாதுக்களாக வாழ்ந்த பெரியவர்களின் வழித் தோன்றல்கள் தங்களைத் தனித்தனி சாதிகள் என்று பிரித்துக் கொண்டு வாழ்ந்ததால் சாதிகள் உண்டாயின.

எனவே, சாதியின் பெயரால் விளையும் அனைத்து வகையான சண்டை சச்சரவுகளும், வேற்றுமைகளும் பயனற்றவையே யாகும். இதேபோல், மனிதனை ஆதியில் விலங்கு நிலையிலிருந்து அழகிய, இனிய, அன்புநிறைப் பண்புகளைப் பெற்ற மனிதனுக்கியதுதான் இந்து மதம். இது ஒரு சமுதாயத் தத்துவம். இந்தத் தத்துவம்தான், (இந்து மதம்தான்) மனிதர்களை ஒற்றுமை யோடும், ஒருமைப்பாட்டோடும், பற்றோடும், பாசத்தோடும், அன்போடும், இனிமையோடும், உறவுகளையும், உரிமைகளையும் மதித்து வாழச் செய்திடும். தமிழ்மொழிக்குத்தான் மானுடர்களைப் படிப்படியாக எல்லா வகைகளிலும் நிலைகளிலும் உயர்த்தித் தெய்வங்களாகவும், தேவர்களாகவும், கடவுள்களாகவும் ஆக்கிட முடியும்; உலக மொழிகள் அனைத்திற்கும் நல்லுறவையும், பெருமைமிகு உரிமையையும் காத்துத் தரமுடியும்.

இதுகாறும், சுருக்கமாக 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழர் மத விடுதலை இயக்கம்' என்ற மூன்று அமைப்புக்களின் வரலாறும் செயல்திட்டங்களும் இன்றைக்கு அவற்றின் ஆற்றல்களும் தெளிவாக விளக்கப்பட்டு விட்டன. விரிவான விளக்கம் பெரிய நூலாக வரவிருக்கின்றது. எனவே மிகுதியான ஆர்வமுடையவர்கள் இந்த மூன்று இயக்கங்களின் தலைவராக இருக்கும் குருதேவர், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களுக்கும், இந்துமறுமலர்ச்சி இயக்கத் தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார் அவர்களுக்கும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைப்பீடச் செயலகத்தார், மாவட்ட வட்ட வட்டாரச் செயலகத்தார்கள்... முதலியோர்களுடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இரண்டு நூற்றாண்டு காலத்திற்கு மேலாகத் தமிழர்களின் உயர்வுக்கும், உய்வுக்கும், இந்துமதத்தின் வளவளர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கும் முயற்சிக்கும், பொருளுலக அருளுலக இருளகற்றும் முயற்சிக்கும், தமிழர்களே மூலவர்களாக, முதல்வர்களாக, காவலர்களாக, துணைவர்களாக, வழிகாட்டிகளாகச் செயல்பட வர வேண்டும், வர வேண்டும், வர வேண்டும். தமிழர்களால்தான் வருங்காலத்திலாவது எல்லாத் துறைகளிலும் நேர்மையும், நீதியும், நியதியும், செம்மையும், நிறைவும், நிம்மதியும்... தழைத்திட வேண்டும். இந்த அமைப்பினைப் புரிந்து விரும்பி இந்தத் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களில் பங்கு பெற்றுச் செயலாற்றிட வாரீர்! வாரீர்!! வாரீர்!!! மாற்று மதத்தவர்கள் போல் வேற்று நாடுகளில் உள்ள

தமிழர்கள் தாராளமாக நிதியுதவி வாரிவாரி வழங்குங்கள். இந்துமத நாடான இந்தியாவில் இருக்கின்ற தமிழர்கள் நேரடியாகத் தங்கள் உழைப்பினை வாரிவாரி வழங்குங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம்

---

# இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்

### 1) பிறப்பிடம்:

'இளமுறியா'க் கண்டம் (The Lost Lemuria) எனும் கடலில் மறைந்த குமரிக்கண்டம்.

### 2) காலம்:

பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் 43,73,089 ஆண்டுகளுக்கு முன்னால் தோற்றுவிக்கப் பட்டது.

### 3) மொழி:

தமிழ்மொழி

### 4) வழிபாட்டு நிலையம்:

108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

### 5) இந்துமதக் காவலர்:

48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள்.

### 6) இந்துமதம் வளர்ப்பவர்:

இம் மண்ணுலகில் தோன்றும் 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடு நிலையினர், அருட்சத்தி பெற்றோர் (பூசாறி, ஆச்சாரி, மருளாளி, அருளாளி...)

### 7) இந்துமத நூல்கள்:

நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் எனும் 48 வகை மூல நூல்கள்.

### 8) இந்துமதப் பயன்கள்:

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

- இந்துமதம் என்பது முன்னோர் வழிபாடு; மூத்தோர் வழி நடத்தல்.
- இந்துமதம் உயிரினம், பயிரினம், மண், விண் முதலியன விளக்கும் மதம்.
- இந்துமதம் அனைத்தையும் விளக்கும் அறிவியல் மதம்.
- இந்து மறுமலர்ச்சி இயக்கம் நான்கு யுக உண்மைகளையே கூறுகிறது.
- இந்து மறுமலர்ச்சி இயக்கம் அருளாட்சி அமைக்கத்தான் அழைக்கிறது.
- அருளாட்சிதான் அருளுலகப் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும் அகற்றும்.

# “தமிழர் மதமே இந்துமதம்” “இந்துமதத்தின் ஆறு சமயங்கள்”

## [ஆறு பதினெட்டுக்கள்]

1) இந்துமதச் சமயம் ஒவ்வொன்றும் பதினெண்சித்தர் வடிவாக, வாழ்வாக, அருளூறு இலக்கியங்கள் பதினெட்டினைப் பெற்றிருக்கிறது.

2) இந்துமதச் சமயங்களின் மொத்த இலக்கியங்களான நூற்றெட்டும் அழகிய பழகுதமிழ்ச் சொற்களால் ஆனவையே; எல்லாச் சொற்களும் பொருளாழமும் எளிமையும் இனிமையும் உடையவையே; எல்லாச் சொற்களும் இறையாற்றல் ஊற்றெடுப்பவையே.

3) இந்துமதச் சமயங்கள் ஆறுக்கும் உரிய இலக்கியங்களின் பெயர்கள் அழகான செந்தமிழ்ச் சொற்களால் ஆனவையே.

4) ‘இந்து’ என்ற சொல்லுக்கு ஆதிசிவனார் நாற்பத்தெட்டு அழகிய பைந்தமிழ்ச் சொற்களால் பொருள்விளக்கம் தருகின்றார். இந்து = விந்து, உயிரணு, உயிரின் கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும், அழகு, அன்பு, அமைதி, அருள், ஆதரவு, இல்லறம், இன்பம், இனிமை, இளமை, இரக்கம், இறைமை, ஈகை, உறவு, உரிமை, உய்வு, உயர்வு, உழைப்பு, ஊக்கம், எல்லா (கதிரவன், சூரியன், ஒளி), எளிமை, ஏற்றம், ஒலி, ஒளி, ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஓகம், ஓதி உணர்தல், பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம், ஞானம், வலிமை, வளம், பற்று, பாசம், நேர்மை, வாய்மை, தூய்மை, மெய்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி, நிலைப்பேறு.

5) பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூரார் கி.மு.100 முதல் கி.பி.150 வரை செயல்பட்டவர். இவர் தமது குருபாரம்பரியத்தில்; “... இந்துமதம் 43,71,000ஆம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி முறையாகவும் நிறையாகவும் வாழ்ந்திருந்தும் கூடப் பிற மண்ணினரான பிராமணர் எனும் வடஆரியரால் இரண்டாயிரமாண்டுக் காலக் குறுகிய எல்லைக்குள் மிகப்பெரிய சிதைவு, சீரழிவு, திருத்தம், மாற்றம், பயனற்ற பழக்க வழக்கம், அறியாமை மிகு சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள், கண்மூடித் தனமான கற்பனைக் கதைகள், குழப்பவாதப் புராணங்கள், ... முதலியவற்றைப் பெற்றுவிட்டன. இன்றைக்கு எம் காலத்தில் ‘இந்து’ என்ற அமுத வண்டமிழ்ச் சொல்லுக்கு நூற்றுக்கு மேற்பட்ட அழகிய பொருள் விளக்கச் சொற்கள் அமைந்துவிட்டன. முன்பு,

ஆதிசிவஞரே இந்தப் பதினெண் சித்தர்களின் 'சித்தர்நெறி' எனும் 'சீவநெறி'யான (சீவநெறி -> சிவநெறி -> சைவநெறி -> சைவசமயம்) இந்துமதத்திற்கு நாற்பத்தெட்டு தீந்தமிழ்ச் சொற்களால் பொருள் வழங்கியுள்ளார். ஆனுல், இன்றுள்ள நந்தமிழர்களே இந்துமதத்தைப் பிருமணருடையது; சமசுக்கிருத மொழிக்குரியது என்று கருதியும் கூறியும் திரிகிருர்கள். இவற்றை மாற்றிடவே 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' தோற்றுவிக்கப்பட்டது. ஆனுல், 'இந்து' என்ற சொல்லேயே தமிழர் ஏற்கத் தயங்குகின்றனர். எனவேதான், 'தமிழின விடுதலே இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலே இயக்கம்', 'தமிழர் மத விடுதலே இயக்கம்' ... முதலிய நாற்பத்தெட்டு நிறுவன நிர்வாகங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன ..." என்று எழுதுகிருர்.

6) இவற்றையெல்லாம் பல்வேறு கோணங்களில் தெளிவாக எடுத்தெடுத்து விளக்கிக் கூறி எழுதுகிருர் தஞ்சைப் பெரிய கோயிலேக் கட்டிய பதிஞேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (கி.பி.785 முதல் கி.பி.1040). அப்படியவர் தமது 'குருபாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்', 'அரசபாரம்பரியம்' என்ற முப்பெரும் தொடர் வரலாற்று நூல்களால் உருவாக்கிய பிற்காலச் சோழப் பேரரசு கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய 'தமிழினப் பேரரசாக', 'தமிழ்மொழிப் பேரரசாக', 'தமிழரின் இந்துமதப் பேரரசாக' விளங்கிற்று.

7) இவற்றை எண்ணிப் பார்த்தாவது; 'இன்றைய தமிழர்கள் தங்களுடைய மதம்தான் இந்துமதம்' என்ற பேருண்மையினே உணர்ந்து இதன் மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் பாடுபடல் வேண்டும். அதற்குத் தமிழின விடுதலேயும், தமிழ்மொழி விடுதலேயும் இரு கண்ஞகிடும் என உனர்ந்து 'தமிழின மொழி மத விடுதலே இயக்கம்' வளரப் பாடுபடல் வேண்டும்.

8) தமிழர்கள் 'தன்மானப் பிடிப்பு', 'இனமானப் பிடிப்பு', 'இன உணர்வுப் பிடிப்பு', 'இன ஒற்றுமை', 'இன ஒருமைப்பாடு' ... முதலிய **பண்புகளில் நலிந்து அடிமைப் பட்டுள்ள நிலேகளே மாற்றும் பகுத்தறிவுப் புரட்சிதான் (Rationalistic Revolution) 'தமிழின விடுதலே இயக்கப் பணி'**.

9) தமிழர்கள் 'தாய்மொழிப்பற்று', 'தமிழ்மொழி உணர்வு', 'தமிழிலக்கிய ஆர்வம்', 'தமிழ்மொழியின் உரிமை வாழ்வு', 'தமிழ்மொழியின் அருமை பெருமை' ... முதலியவைகளே மறந்தும் துறந்தும் வாழுகிருர்கள். இவர்களின் மறதியையும், துறவையும் மாற்றும் இலக்கியப் புரட்சி அல்லது கருத்துப் புரட்சிதான் (Literary Revolution or the Ideological

Revolution) **'தமிழ்மொழி விடுதலை இயக்கப் பணி'**.

---

***மூலம்: 'தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களின் கொள்கை விளக்கம்' - 1987இல் அச்சிட்ட புத்தகம்.***

# "இந்து மறுமலர்ச்சி இயக்க வீரமுழக்கங்கள்"

1. பொருளுலகில் வாழும் அனைத்து வகையான வறட்சிகளையும் அகற்றும் வல்லமை அருளுலகப் புரட்சிக்குத்தான் உண்டு.

2. நாத்திகர்களின் மடமைகளையும், பிற்போக்குகளையும், வெறிகளையும் கூட நலப் படுத்தும் வலிமை ஆத்திகர்களுக்குத்தான் உண்டு.

3. பகுத்தறிவு வாசகங்கள், சீர்திருத்த வாசகங்கள், புரட்சி வாசகங்கள், மறுமலர்ச்சி வாசகங்கள்.... உருவாக்கித் தராத சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அருள் வாசகங்கள் அமைத்தே தீரும்.

4. அருளொளியால்தான் அக வாழ்விலும், புறவாழ்விலும் மண்டிக் கிடக்கும் இருள்களை முழுமையாக அகற்ற முடியும்! முடியும்! முடியும்!

5. அறிவியல் சாதனைகளால் நலப் படுத்த முடியாதவைகளையும் நலப்படுத்துபவையே அருள்நெறிச் சாதனங்கள்.

6. நமது மதம் கதைகள் நிறைந்த ஒன்றல்ல, தத்துவ விதைகள் நிறைந்த ஒன்று.

7. நமது மத ஞானம் ஒரு மெய்ஞ்ஞான விஞ்ஞானம். இஞ்ஞானம் அகவாழ்வையும், புறவாழ்வையும் விளக்கும் விஞ்ஞானம். இதற்கு ஈடாக எஞ்ஞானமும் இல்லை.

8. நமது மதம் ஒரு மாபெரும் வாழ்வியல் தத்துவம். சமுதாய இயல் சித்தாந்தம்.

[தத்துவம் = Philosophy; சித்தாந்தம் = Theology]

9. அருளை அனுபவப் பொருளாக அனைவருக்கும் வழங்க வல்ல உண்மை மதமே சித்தர் நெறி.

**அன்பே சிவம்**

# கடவுள் தமிழ், தெய்வத் தமிழ், தேவத் தமிழ், வேதத் தமிழ்.

**அருளுபவர்:**

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் பதினெண் சித்தர் மடாதிபதி, இந்துவேத பாடசாலை வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 600053**

1. அண்மையில் சென்னையம்பதியில் பிப்ரவரி 1992, 23, 24, 25, 26 ஆகிய தேதிகளில் திருவருட்பயனால் மிகப் பெரிய அளவில் சிறப்பாக அனைத்துலக தெய்வத் தமிழ் மாநாடு 1992 நிகழ்ந்தேறியது. அதன் பயனாகத் திருமடத்திலிருந்து (இந்து வேதத்தை அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் நான்கு யுகங்களுக்கு முன்னால் இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடம்) இந்த நூல் அவசர அவசியமாக வெளியிடப்படுகிறது. ஏனென்றால், 'தமிழ் வாழ்க!', 'தமிழ் வளர்ப்போம்!', 'தமிழ் உரிமை பெறுவோம்!', 'தமிழ் விடுதலைக்காகப் போராடுவோம்!', 'தமிழ் மொழியை ஆட்சிமொழி யாக்குவோம்!',.... என்று அரசியல்வாதிகள் நெடுங்காலமாக முழங்கிக் கொண்டேயிருக்கிறார்கள், முழங்கிக் கொண்டேயிருக்கிறார்கள், முழங்கிக் கொண்டே யிருக்கிறார்கள். ஏனென்றால், தமிழ்மொழியின் பெயரைச் சொல்லித்தான் அரசியல் வாதிகள் தங்களுடைய மேடைப் பேச்சுகளைப் பேசி முடிக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தங்களுடைய கொள்கை விளக்கத்தையும், குறிக்கோள் நோக்கத்தையும் தமிழைச் சொல்லியே மழுப்பி விடுகிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக அரசியல்வாதிகள் தமிழின் பெயரைச் சொல்லித்தான் தேர்தலில் ஓட்டுகளைப் (வாக்குகளைப்) பெறுகிறார்கள்.

2. அதாவது, தமிழின் பெயரைச் சொல்லித்தான் அரசியல்வாதிகள் வாழுகிறார்கள்!, வளருகிறார்கள்!, வளம் பெறுகிறார்கள்!, வலிமை பெறுகிறார்கள்!... ஆனால்!?, ஆனால்!? ஆனால்!? அரசியல்வாதிகளால் தமிழ் வாழவைக்கப் படவில்லை! தமிழ் வளர்க்கப்படவில்லை!, தமிழ் வளம் பெறவில்லை!, தமிழ் வலிமை பெறவில்லை!,......... எனவே, அழகுத் தமிழ், அமுதத் தமிழ், அருள் தமிழ், ஆட்சித்தமிழ், இன்பத் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண் தமிழ், தீந்தமிழ்,.... இருக்கிறதா?; இறக்கிறதா?; இருக்கிறதா?, இறக்கிறதா?; இருக்கிறதா?, இறக்கிறதா?; அல்லது, இருக்குமா? இறக்குமா?,

இருக்குமா?, இறக்குமா?; இருக்குமா?, இறக்குமா? என்ற கேள்விக்கு உரிய நிலை பெரும்பாலானவர் களிடம் உருவாகிவிட்டது. எனவேதான், இந்த நூல் பதினெண் சித்தர் மடத்தால் அவசர அவசியமாக வெளியிடப் படுகிறது.

3. சமுதாயச் சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், சமுதாயவாதிகள்,... என்கின்ற ஒரு சாரார் நெடுங்காலமாக "எல்லாம் தமிழில் இருக்கிறது"; "தொன்மையான தமிழில் எல்லாம் இருக்கிறது"; "பழந்தமிழில் எல்லாம் இருக்கிறது"; "தமிழிலக்கியங்களில் இல்லாதது எதுவுமில்லை"; "பிற்காலத் தமிழிலக்கியங்கள் கெட்டுப் போனதால் தமிழ்ச் சமுதாயம் கெட்டுப் போய்விட்டது"; "தமிழின் மூலம்தான் தன்மானம் பிழைக்கும்"; "தமிழின் மூலம்தான் சுயமரியாதை காப்பற்றப்படும்"; "தமிழின் மூலம்தான் இன உணர்வை வளர்க்க முடியும்"; "தமிழின் மூலம்தான் தமிழர்களை ஒன்று திரட்ட முடியும்"; "தமிழின் மூலம்தான் எல்லா அறிவுச் செல்வங்களையும் பெறமுடியும்",... என்று இப்படி பேசிப் பேசித் தங்களை வளப்படுத்திக்கொண்டு, வலிமைப்படுத்திக் கொண்டு, வாழவைத்துக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள், பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள், பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்களால் தமிழ் வாழவில்லை, தமிழ் வளர வில்லை, தமிழ் வலிமை பெறவில்லை. எனவேதான், இந்த நூல் பதினெண் சித்தர் மடத்தால் அவசர அவசியமாக வெளியிடப்படுகிறது.

4. இலக்கியவாதிகள் என்பவர்கள் தங்களை அரசியல்வாதிகளாகவும் காட்டிக் கொள்வதில்லை; தங்களைச் சமுதாயவாதிகளாகவும் காட்டிக் கொள்வதில்லை; தங்களைச் சமுதாயச் சீர்திருத்த வாதிகளாகவும் காட்டிக் கொள்வதில்லை; தங்களை நாத்திகர்களாகவும் காட்டிக் கொள்வதில்லை; தங்களை பகுத்தறிவு வாதிகளாகவும் காட்டிக் கொள்வதில்லை; ... இவற்றிற் கெல்லாம் மேலாக இவர்கள் தங்களை மத வாதிகளாகவோ, சமய வாதிகளாகவோ, ஆன்மீக வாதிகளாகவோ, ஆத்திக வாதிகளாகவோ கூடக் காட்டிக் கொள்வதில்லை; ஆனால்!?!?!?...... ஆனால் !?!?!?... ஆனால்!?!?!?... இவர்கள் தங்களை எல்லா வகைப்பட்ட வாதிகளாகவும் காட்டிக் கொள்ளுகிறார்கள். அல்லது காட்டிக் கொள்வார்கள். ஏனென்றால், இந்த இலக்கிய வாதிகள் பல தனிமனிதர்களாகவும், பல தனிப்பட்ட நிறுவன நிர்வாகங்களாகவும், பல குழுக்களாகவும், சில பெரியபெரிய கூட்டங்களாகவும் தொடர்ந்து காலங்கள் தோறும் பிரிந்திருந்தே இலக்கியக் கூட்டங்களை, 'இலக்கியக் கருத்தரங்குகளை', இலக்கியப்

பட்டிமன்றங்களை', 'இலக்கிய விழாக்களை', 'இலக்கிய மாநாடுகளை',... நிகழ்த்தி, நிகழ்த்தித் தங்கள் தங்களுடைய புகழையும், செல்வாக்கையும், தங்கள் தங்களின் திறமைக் கேற்பப் பொருட் செல்வங்களையும் ஈட்டிக் கொள்கிறார்கள், ஈட்டிக் கொள்கிறார்கள், ஈட்டிக் கொள்கிறார்கள், அல்லது சம்பாதித்துக் கொள்கிறார்கள், சம்பாதித்துக் கொள்கிறார்கள், சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

ஆனால், இவர்களால், தமிழுக்கென்று புகழோ, செல்வாக்கோ அல்லது செல்வமோ ஈட்டப் படவில்லை, ஈட்டப் படவில்லை, ஈட்டப் படவில்லை; அல்லது சம்பாதிக்கப் படவில்லை, சம்பாதிக்கப் படவில்லை, சம்பாதிக்கப் படவில்லை.

எனவேதான், இந்தப் புத்தகம் பதினெண்சித்தர் மடத்தால் வழங்கப் படுகிறது, வெளியிடப் படுகிறது.

5. இந்த நாட்டின் மதவாதிகள், சமயவாதிகள், பத்தியாளர்கள் எனப்படுபவர்கள் ஏறத்தாழத் தமிழ் மொழி வழியாகத் தங்களுடைய அன்றாட பூசைகளைக் கூட நடத்தத் தெரியாதவர்களாக!; நடத்த அறியாதவர்களாக!; நடத்தப் புரியாதவர்களாக!; நடத்தத் துணிவு இல்லாதவர்களாகவே! இருந்தார்கள்!, இருந்தார்கள்!, இருந்தார்கள்!; இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்; அநேகமாக இருப்பார்கள், இருப்பார்கள், இருப்பார்கள். ஏனென்றால், இவர்களில் பெரும்பாலானவர்களுக்குத் தமிழ் மொழியின் வரலாறும் தெரியாது; தமிழிலக்கியத்தின் வரலாறும் தெரியாது.

மேலும் இவர்களில் எவருக்குமே இந்து, இந்து வேதம், இந்தியம், இந்து வேத மதமான இந்துமதம், இந்தியா,... முதலிய சொற்கள் தூய உயர்தனிச் செந்தமிழ்ச் சொற்கள் என்ற பேருண்மையைத் தெரியாதவர்களாகவும், தெரிந்தாலும் ஒப்புக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். அதாவது, இத் திருநாட்டின் மதவாதிகளும், சமூகவாதிகளும், பத்தியாளர்களும்;

*'தமிழ் மொழியில்தான் வேதம் இருக்கிறது';*

*'தமிழ்மொழிதான் தேவமொழி';*

*'தமிழ்மொழிதான் தெய்வமொழி';*

*'தமிழ்மொழிதான் கடவுள் மொழி';*

*'தமிழ்மொழிதான் இந்த உலகின் முதல்மொழி';*

*'தமிழ்மொழிதான் இந்த உலக மொழிகளுக் கெல்லாம் மூலமொழி';*

*'தமிழ் மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி';*

*'தமிழ் மொழிதான் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் விளைவித்துத் தரக் கூடிய*

*மொழி';*

*'தமிழ் மொழிதான் மனிதர்களைக் கடவுளாக்கும் மொழி';*

*'தமிழ் மொழிதான் கடவுள்களை நேரில் மனிதர்களுக்கு உதவச் செய்யும் மொழி';*

*'தமிழ் மொழிதான் கல்லையும், மண்ணையும், புல்லையும், செடிகொடி மரங்களையும், காணும் பொருள்களையும் கடவுள் ஆற்றல் ஊற்றெடுக்கும் அருளூற்றுக்களாக உருவாக்கித் தரக் கூடிய மொழி!' ...*

என்ற பேருண்மைகளைத் தெரியவோ!?; அறியவோ!?; ஆராயவோ!?; புரியவோ!?; உணரவோ!?; ஒப்புக் கொள்ளவோ!?; நம்பவோ!? முடியாத அப்பாவிகளாக, அப்பாவிகளாக, அப்பாவிகளாக, அப்பாவிகளாகவே இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

எனவேதான், பதினெண்சித்தர் மடம் இந்தப் புத்தகத்தை அவசர அவசியமாக வெளியிடுகிறது.

6. இப் பதினெண்சித்தர் மடமும், பீடமும்தான்; அருளுலகின் மூலமாக, முதலாக, பிறப்பிடமாக, இருப்பிடமாக, காப்பிடமாக இருந்து வருகிறது. எனவேதான், இம் மண்ணுலகில் அருட் பயிரினங்களின் நாற்றங்கால்களாகவும், நாற்றுப் பண்ணைகளாகவும், விதைப் பண்ணைகளாகவும் தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும் தொடர்ந்து செயல்படும் அரிய பெரிய நிலை நிலைநிறுத்தப் பட்டு வருகிறது.

7. அண்ட பேரண்ட அருளாட்சி நிகழ்த்தி வரும் பதினெண் சித்தர்களுடைய தாய்மொழியும்; அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான; அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளை அநுபவப் பொருளாக விளைவித்துத் தேவையானவர்களுக்கு மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் அருட்கலைகள் இருக்கின்றன. இவற்றுள் (1) கடவுட் கலைகள், (2) தெய்வீகக் கலைகள், (3) தேவதைக் கலைகள், (4) பேய்க் கலைகள், (5) நோய்க் கலைகள், (6) தேய் கலைகள், (7) ஓய் கலைகள், (8) மாய் கலைகள், (9) ஆய் கலைகள் எனும் ஒன்பதும் குவலய குருபீடமான பதினெண்சித்தர் மடத்துக்கும் பீடத்துக்கும் உரிய கருகுலத்தின் இந்து வேத பாடசாலையில் முறையாகக் கற்றுத் தரப் படுகின்றன.

8. இவை, ஏட்டறிவாகப் பொது மக்களுக்கு வழங்கப்படுவதோடு; தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள பெரிய நந்தியின் வாயிலுள்ள பன்னிரண்டு பற்களின் விளக்கமான (1) காற்று (2) கருப்பு (3) பேய் (4) பிசாசு (5) பில்லி (6) சூனியம் (7) ஏவல் (8) செய்வினை (9) வைப்பு (10) கழிப்பு (11) மருந்து (12) கண்ணேறு எனும் பன்னிரண்டு வகைப்பட்ட பாதிப்புகளால்; மனித

வாழ்க்கை மாட்டுப் பற்களுக் கிடையில் அகப்பட்ட புற்கள் போல் கசக்கப்பட்டு, நசுக்கப்பட்டுச் சிதைத்து அரைக்கப் படுவதிலிருந்து காப்பாற்றும் பணியை இக் கருகுலத்தில் தயாராகின்ற நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள் காத்திடும் பணி தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது, தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது, தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதாவது, இந்த மண்ணுலகு; இதனைச் சுற்றியுள்ள கோள்கள் ஒன்பதினாலும், இராசிகள் பன்னிரண்டினாலும், மீன்கள் இருபத்தி யேழினாலும்,,, ஆக மொத்தம் (9 + 12 + 2 7 = 48) நாற்பத்தெட்டு வகையான விண்வெளிச் சத்திகளின் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கிறது என்பதுதான் உண்மை. இந்தப் பேருண்மையினை, அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும்; அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருட்கல்வியை (சாகாக் கல்வியை) வழங்கி; இச் சாகாக்கல்வி கற்று பயிற்சி, முயற்சி, தேர்ச்சி, முதிர்ச்சி பெறுபவர்களின் நிலைகளுக்கேற்ப நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டங்களை வழங்கும் அருளுலகப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தினை (The curricular system of the Divine Educational University) வகுத்துள்ளார்கள். இதன் படியே, கடந்த நான்கு யுகங்களாக ஆதிசிவனார் முதல் இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி வரை முறையாகக் ‘குருகுலம்’, ‘திருகுலம்’, ‘தருகுலம்’, ‘கருகுலம்’ எனும் நான்கினையும் தேவைக்கேற்ப நிறுவி நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட்பட்டத்துக்கும் உரியவர்களை உருவாக்கி வருகிறார்கள். எனவேதான், இம் மண்ணுலகில் அருட் பயிரினங்கள் முழுமையாக அழிந்தொழிந்து அருளுலகம் பாலைவனம் ஆகி விடாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதாவது, அருளூறு அமுதத் தெய்வீகத் தமிழ் மொழி அருளாற்றலினை ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காக வற்றாது ஓடச் செய்வதனால்தான்; இந்த அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் அருளாற்றின் வற்றாத அருள் நீர்க் கொடையால் அருட் பயிரினங்கள், உயிரினங்கள் பசுமையாகச் செழித்து வாழுகின்றன, வாழுகின்றன, வாழுகின்றன. இதுதான், உலகப் பேருண்மை, உலகப் பேருண்மை, உலகப் பேருண்மை.

9. இந்த உலகப் பேருண்மையின் சான்றாகவும், ஊன்றாகவும்தான்; இன்றைக்குப் பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், பீடத்தின் பீடாதிபதியாகவும் உள்ள அண்டபேரண்ட அனாதிஆதி சத்திகள் சன்னிதானம், கருவறை

மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்ஞர், அருட்கொடை வள்ளல், அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மெய்ஞ்ஞான சபைத் தலைவர், குவலய குருபீடம், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் முறையாக குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் நிறுவிச் செயல்பட்டு வருகிறார். இவரே, ஆச்சாரியாராகவும், போதகராகவும், சாதகராகவும் இருந்து அருட்கல்வி வழங்கி சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள், பண்டார சந்நிதிகள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், அரியவாள்கள், கூரியவாள்கள், சீரிய வாள்கள், பெரிய வாள்கள், நேரிய வாள்கள், வீரிய வாள்கள், ஏமகோடிப் பீடங்கள், சோமகோடிப் பீடங்கள், வாமகோடிப் பீடங்கள், ... முதலிய அவசர அவசியத் தேவைக்குரிய அருட் பட்டத்தவர்களை (அருட் கலைஞர்களை) உருவாக்கி அருளுலகப் பொருளுலக இருளகற்றி வருகின்றார். இந்த அருட் பட்டத்தவர்களே அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்; 'இம்மண்ணுலகின் முதல்மொழி', இம்மண்ணுலகின் மூலமொழி', 'இம்மண்ணுலகின் அருள்மொழி', 'இம்மண்ணுலகின் சாகக் கல்விக்குரிய மொழி', 'இம்மண்ணுலகக் கடவுளர் மொழி', 'இம்மண்ணுலகத் தேவர் தேவதை மொழி', ' இம்மண்ணுலகில் கல்லையும், மண்ணையும், புல்லையும், காணும் பொருள்கள் அனைத்தையும் கடவுள்களாக்கிடும் உயிர்ப்பு மொழி', 'இம்மண்ணுலகில் வழிபடு நிலையிலிருக்கும் கோயில்களுக்கு அருளாற்றல் குறைவு ஏற்படுவதை நிறைவு செய்யும் புத்துயிர்ப்பு மொழி', 'இம்மண்ணுலகில் மனிதனைக் கடவுளாக்கும் பூசை மொழியினை உடைய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற அருளாற்றல் மிகு மொழி', 'இம்மண்ணுலகில் மானுடர் கடவுள்களையும், தெய்வங்களையும், தேவர் தேவதைகளையும், மற்ற அருளுலகத்தவர்களையும் காணுவதற்கு விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கின்ற ஒரே ஓர் ஒப்புயர்வற்ற மொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்' ...... என்ற பேருண்மைகளை அனுபவப் பொருளாக விளக்கிக் காட்டுபவர்கள்தான் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியாரால் உருவாக்கப்பட்டு வருகின்ற மேற்படி நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருட் பட்டத்தவர்கள், அருட்கலைஞர்கள்.

10. 'கடவுள் தமிழுக்கும்', 'தெய்வத் தமிழுக்கும்', 'தேவத் தமிழுக்கும்', 'வேதத் தமிழுக்கும்', 'வாழையடி வாழையெனப் பாரம்பரியமாகத் தலைமையேற்று வரும் அந்தணர்

அண்ணல் ஞாலுச்சாரியார் அவர்கள் தம் காலத்தில் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் மூலம் கோயில் கருவறை ஊழியக் காரர்களான பூசாறி, குரு, குருக்கல், குருமார்,.... முதலிய நால்வர் முதல் உடுக்கையடிக்கும் பூசாறி, முத்துக் குறி சோதிடர், கிளி சோதிடர், அருளாளர், அருளாளி, அருளாடு நாயகம், மருளாளர், மருளாளி, மருளாடு நாயகம்,..... முதலியவர்களை யெல்லாம் உருவாக்கி நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் நலமளிக்கும் 'சித்தர் கருவூரூர் அருட்கோட்டங்கள்', 'சித்தர் கருவூரூர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள்', 'சித்தர் கருவூரூர் தமிழ் தெய்வீக மருத்துவ மனைகள்', ... முதலியவைகளை எல்லாம் நிகழ்த்தி வருகிறூர். பொதுமக்கள் நாள், கோள், மீன் பாதிப்புகளாலும்; இராசி பாதிப்புகளாலும், நாகப் பாதிப்புகளாலும்; (1) காற்று, (2) கருப்பு (3) பேய் (4) பிசாசு (5) பில்லி (6) சூனியம் (7) ஏவல் (8) செய்வினை (9) வைப்பு (10) கழிப்பு (11) மருந்து (12) கண்ணேறு முதலிய பாதிப்புகளாலும் தொல்லை யுற்றுத் துன்புறுவதிலிருந்து பாதுகாக்கும் பணியினை தமிழ் மொழி மூலம் நிகழ்த்தி வருகிறூர். இதன் மூலம்தான் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் அருளுலகத்தவரின் வரி வடிவங்களேயாகும்; தமிழ்ச் சொற்களின் ஒலி நயங்கள் அருளுலகத்தவர்கள் வழங்கும் அருட் கொடைகளாகும் என்ற பேருண்மையினை நிலைநாட்டி வருகிறூர்; இக்கடவுட் தமிழுக்கும், தெய்வத்தமிழுக்கும், தேவத் தமிழுக்கும், வேதத் தமிழுக்கும் உரிய மெய்ஞ்ஞானசபைத் தலைவராக விளங்கும் அந்தணர் அண்ணல் ஞாலுச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரூர் அவர்கள்.

11. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்கள், தெய்வங்கள், தேவர்கள், தேவதைகள், பட்டவர்கள், ஆண்டவர்கள், இறைவர்கள், ... எனப்படும் 48 வகைப்பட்டவர்களும் கோடிக்கணக்கில் இருக்கின்றூர்கள், இருக்கின்றூர்கள், இருக்கின்றூர்கள் என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கின்றது.

12. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்களில் (கடவுள் என்பது அருளுலகின் 48 வகையினரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இங்கு குறிக்கப் பட்டிருக்கின்றது) ஆண், பெண், அலி என்ற மூன்று வகையினர் உண்டு என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கிறது.

13. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு

அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்களுக்கு 'பிறப்பு', 'இறப்பு', 'பிறப்பிறப்பற்ற பெருநிலே' என்ற மூவகை நிலேகளும் உண்டு என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கின்றது.

14. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்களில் 'அருவக் கடவுள்கள்', 'அருவுருவக் கடவுள்கள்', 'உருவ அருவக் கடவுள்கள்', 'உருவக் கடவுள்கள்' என்ற நான்கு வகை உண்டு என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கின்றது.

15. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்கள் தோன்றுகின்ற முறைகளாலும், தோற்றுவிக்கப் படுகின்ற முறைகளாலும்; 'திருக்கல் நிலேக் கடவுள்கள்', 'தருக்கல் நிலேக் கடவுள்கள்', 'கருக்கல் நிலேக் கடவுள்கள்', 'குருக்கல் நிலேக் கடவுள்கள்' என்ற நான்கு வகையினர் உண்டு என்ற பேருண்மை விளக்கப் பட்டிருக்கின்றது.

16. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுள்களிடத்துப் பத்தி செய்கின்ற முறைகளில்; பத்தியாளர் இருக்கு மிடத்திலேயே கால் மடக்கி, கை கட்டி, கண்மூடித் தவத்தில் அமர்ந்து கடவுளே நெஞ்சத்தாலும், சிந்தையாலும் மட்டும் வாழ்த்தி வணங்கி வேறு எவ்விதப் பூசையோ, படையலோ செய்யாமல் வழிபடும் **'திருமுறை'** என்றும்; பத்தியாளர் தமக்கு விருப்பமான பயிரினங்களுடைய வேர், தண்டு, கிளே, இலே, பூ, காய், கனி, வித்து,... முதலியவைகளேப் பூசனேப் பொருள்களாகவும், படையல் பொருள்களாகவும், பலி பொருள்களாகவும் பயன்படுத்தி வழிபடும் **'தருமுறை'** என்றும்; பத்தியாளர் தான் விருப்பமாக உண்ணக்கூடிய மீன், கோழி, ஆடு,... முதலியவற்றின் குருதிப்பலியையும், குருதிப்பலி நீராட்டையும், இறைச்சியுணவுப் படையலேயும், இறைச்சியுணவு அவிர்ப்பலியையும் பூசைப் பொருள்களாக்கி வழிபாடு செய்யும் **'கருக்கல் முறை'** என்றும்; பத்தியாளர் தான் ஏற்றுக் கொண்ட குருவையே அனேத்துமாக நெஞ்ச உணர்விலும், சிந்தை கருத்திலும் முழுமையாக நம்பி ஏற்றுக் குருவிற்கு அணுக்கத் தொண்டு செய்வதையே முழுமையான வழிபாடாக்கி வேறு எந்த கடவுளேயும் நினேக்காமலும், பூசை செய்யாமலும் வாழுகின்ற **'குருமுறை'** என்றும் நான்கு வகைப்பட்ட பத்தி செய்யும் முறைகள் உள்ளன என்ற அருளுலகப் பேருண்மை விளக்கப் படுகின்றது.

17. அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் பத்தியாளர், சத்தியாளர், சித்தியாளர், முத்தியாளர் எனும் நான்கு வகைப்பட்ட அருளுலக வாழ்வினர்களும் தங்களுடைய பொருளுலக வாழ்வில், தங்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும், ஆசை பற்றுப் பாசங்களுக்கும், சொந்த பந்தங்களுக்கும் ஏற்ப **'அறவி வாழ்க்கை'**, **'உறவி வாழ்க்கை'**, **'துறவி வாழ்க்கை'**, **'மறவி வாழ்க்கை'** எனும் நான்கு வகைப்பட்ட வாழ்க்கையில் எந்த வகையான வாழ்க்கை வேண்டுமானாலும் வாழலாம்; அதாவது, இந்த நான்கு வகைப்பட்ட வாழ்க்கை நெறி முறைகளில் எந்த வாழ்க்கை நெறி முறையைப் பின்பற்றினாலும் எவர் வேண்டுமானாலும் எல்லா வகையான பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெற முடியும் என்ற பேருண்மை மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் விளக்கப் படுகின்றது, விளக்கப் படுகின்றது, விளக்கப் படுகின்றது.

18. இந்த அளவில் விரிவஞ்சி, ஞானவேந்தரும், ஞானத்தந்தையும், ஞானாச்சாரியாரும், ஞாலகுருவும், பதினெண்சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியுமான இன்றைய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய கருத்துக்கள் நிறைவு செய்யப் படுகின்றன.

19. திருவருட்செல்வ! தங்களைப் போன்றோர் அன்பு கூர்ந்து 'தமிழ் வாழ்க!', 'தமிழ் வளர்க!', 'தமிழ் ஆட்சி பெற வேண்டும்!', 'தமிழ் பெருமை பெற வேண்டும்!', 'தமிழே எல்லாம்!', 'எங்கும் தமிழ் எல்லாம் தமிழ்!' ... முதலிய முழக்கங்கள் எனும் மேகங்கள் தெய்வத் தமிழ் எனும் முழுநிலவை மூடி மறைத்திருக்கின்றன, முழுநிலவை மூடி மறைத்திருக்கின்றன, முழு நிலவை மூடி மறைத்திருக்கின்றன என்ற பேருண்மையினைத் தெரிந்து புரிந்து செயல்பட முன் வாருங்கள்! தெரிந்து புரிந்து செயல்பட முன்வாருங்கள்! தெரிந்து புரிந்து செயல்பட முன்வாருங்கள்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாரின் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் நிகழ்த்தப் படும் செயல்களுக்கு உங்களால் இயன்ற எல்லா வகையான ஏந்துகளையும், உதவிகளையும், துணைகளையும் தாராளமாக நல்கிட முன் வாருங்கள், தாராளமாக நல்கிட முன்வாருங்கள், தாராளமாக நல்கிட முன்வாருங்கள்.

20. தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளிலும், நாகரீக நெறிமுறைகளிலும், அன்றாட வாழ்வியல் நோக்குகளிலும், போக்குகளிலும், ஊக்குகளிலும் இந்த நான்காவது யுகமான கலியன் உகத்தில் எதிர்பாராமல் ஊடுருவல் செய்திட்ட அன்னிய மொழிகளாலும், அன்னிய மொழி வேதங்களாலும்,

அன்னிய மொழி வேதமதங்களாலும் மிகப் பெரிய சிதைவுகளும், சீரழிவுகளும், நலிவுமெலிவுகளும், வீக்கங்களும், தேக்கங்களும், முடக்கங்களும், அடக்கங்களும், நடுக்கங்களும், ஒடுக்கங்களும் ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டு விட்டன, ஏற்பட்டு விட்டன. எனவேதான்!, எனவேதான்!!, எனவேதான்!!!, ....... தெய்வத் தமிழுக்குரிய தெய்வீகத் தமிழருக் கிடையில் தனி மனிதப் பகைகளும், போட்டாப்போட்டிப் போராட்டங்களும், தன்னல வெறித் துரோக விரோதச் செயல்களும் மிகுந்து விட்டன, மிகுந்து விட்டன, மிகுந்து விட்டன. இவற்றை யெல்லாம் சரி செய்திட முயன்றவர்கள், முயலுகிறவர்கள் இன்றைக்கு அரசியல் தலைவர்களிலோ!? மதத் தலைவர்களிலோ!? சமுதாயத் தலைவர்களிலோ?! இலக்கிய வாதிகளிலோ!? கலையுலக வாதிகளிலோ!? பட்டிமன்ற வாதிகளிலோ!? இலக்கியச் சொற்பொழிவாளர்களிலோ!? புராண இதிகாசக் கதை கூறும் விரிவுரை யாளர்களிலோ!? வென்றவர் யார்? நின்றவர் யார்? என்று சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்; பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரைச் சந்தியுங்கள், சந்தியுங்கள், சந்தியுங்கள்.

**"தமிழே கடவுள்"**

**"தமிழே தெய்வம்"**

**"தமிழே தேவர் தேவதை"**

**"தமிழே வேதம்"**

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!**

---

## அருள் வழங்கல்

1) பதினெண் சித்தர்களின் முறைப்படி அருளை அநுபவப் பொருளாக்கிப் பாதிப்புள்ளவர்களுக்கு மருந்தாகவும், பாதிப்பற்றவர்களுக்கு விருந்தாகவும் வழங்கும் பணி செவ்வாய், வெள்ளி மாலை நேரங்களிலும், ஞாயிறு பகலிலும் நிகழுகின்றன. நாள், கோள், மீன், இராசிப் பாதிப்புக்களுக்கும் (கிரகப் பாதிப்புக்களுக்கும்), மற்ற மந்திரவாதிப் பாதிப்புக்களுக்கும் நலம் வழங்கப் படுகிறது.

2) வீடு, தொழிற் கூடம், கோயில் முதலியவைகளுக்குத் தேவையான சக்கரங்கள், இயந்தர இயந்திர இயந்திறங்களும், எந்தர எந்திர எந்திறங்களும் வழங்கப் படுகின்றன.

3) தனிமனிதர் பூசை செய்யக் கற்றுக் கொடுக்கப் படுகிறது.

4) பிறருக்கு அருள் வழங்கி நலம் விளைவித்துப் பாதுகாப்பு வழங்கிட மந்திரிக்கக் கற்றுக்

கொடுக்கப் படுகிறது.

5) இந்துவேத பாடசாலை நிகழ்த்தப் படுகிறது.

**ஞானாச்சாரியார்**
**இந்துமதத் தந்தை**
**இந்துவேத நாயகம்**
**இந்துவேத பீடம்**
**குருமகா சன்னிதானம்**
**இந்துமதத் தலைமை ஆச்சாரிய மடம்**
**பதினெண்சித்தர் மடம்**
**காரனோடை, சென்னை-600067**

**இந்து வேத வழி ஒன்றுபடுவோம்!**
**உலக அருளாட்சி அமைப்போம்!!**
**மொழி, இன, மத விடுதலை உருவாக்குவோம்!!!**

*இந்தக் கட்டுரையின் மூலம்: குருதேவரே அச்சிட்ட வெளியீடு 111 என்ற புத்தகம். புத்தகத்தின் தலைப்பு:*

**கடவுள் தமிழ்,**
**தெய்வத் தமிழ்,**
**தேவத் தமிழ்,**
**வேதத் தமிழ்.**

## பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரிய வாசகம்

*[அவர் தமது இறுதிக் காலத்தில் சிந்தை நொந்து மனம் நைந்து எழுதியவை]*

1. "பைந்தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளே இந்துமதம்."

2. "அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தமிழ் மொழியில் வழிபடுபவர்களே அளப்பரிய அருளாற்றலை பெறுகிறார்கள்."

3. "அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் உள்ள தமிழர்களில்தான் அருளாளர்கள் காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள்."

4. "மங்கையரை வணங்கும் கடவுளாகப் போற்றி வரும் வண்டமிழரின் வாழ்வியல்தான் இந்துமதம்"

5. "உள்ளங்களும் இல்லங்களும் அருட்பெருஞ் சோதிகளாய் விளங்கும் தமிழினத்தின் விடுதலைதான் உலக இனங்களின் விடுதலை"

6. "தமிழினத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியுமே இந்து மதத்தின் வீழ்ச்சியும் தாழ்ச்சியும்"

7. தமிழின விடுதலையே இந்துமத விடுதலை! இந்துமத விடுதலையே தமிழ்மொழி விடுதலை!! தமிழ்மொழி விடுதலையே இந்துக்களின் விடுதலை!!!"

8. "தாய்மொழி விடுதலையே தன்மான விடுதலை என்று உணர்பவனே மனிதன்"

9. "தனது மதத்தைப் புரிந்தவனே, தான் அனாதையில்லை என்பதைத் தெரிந்தவன்"

10. "அருளுலகப் பொருளுலக வறட்சிகளையும், தாகங்களையும், பசிகளையும் போக்கும் அருளூற்றுக்களே கோயில்கள்"

11. "மனிதகுல அகஞான புறஞான மெய்ஞ்ஞான விஞ்ஞானங்களின் சுருக்க விளக்கத் தொகுப்பே தமிழரின் இந்துமதம்"

12. "அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பெருஞ் சுடர்களே தமிழரின் வழிபாட்டு முறைகள்"

13. "மானுடப் பிறவிக்கும், பயிரின உயிரின வாழ்வியல் இயக்கங்களுக்கும், மண்ணையும் விண்ணையும் இணைத்து இயக்குபவைகளுக்கும் விளக்கம் தருவதே பதினெண்சித்தர்களின் 'சித்தர் நெறி' எனும் 'சீவநெறி'யான மெய்யான இந்துமதம்."

14. "ஆறாத் துயரங்களையும், தீராத் தொல்லைகளையும், மாறாக் கவலைகளையும் நலப் படுத்துவதுதான் தமிழரின் இந்துமதச் சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகள்"

15. "கன்னித் தமிழர் கடவுளருக்குக் கட்டிய கலைக் கோயில்களே காலங்காலமாக நிகழ்ந்து வரும் கருத்து வளர்ச்சிச் சாதனைகளைக் காத்து வரும் கருவூலங்கள்"

16. "குருவாசகமும் திருவாசகமும் அருளுலகின் உயிரும் உடலும் ஆகும்"

17. "கருவாசகமும் தருவாசகமும் அருளுலகின் கண்களாகும்"

18. "அருள் வாசகமும் மருள் வாசகமும் அருளுலகின் கைகளாகும்"

19. "பதினெண் கீழ்க் கணக்கும், மேல் கணக்கும் அருளுலகின் கால்கள் ஆகும்"

20. பதினெண்சித்தர்களின் படைப்புக்களே அண்ட பேரண்ட அருளுலகின் வடிவமைப்பும் வாழ்வியலும் ஆகும்"

*//உண்மை நகல்//*

**மூல நகல் நல்குபவர்:**

**அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழிவாரிசு, குருவின் பதிலி, தருகுலக் காப்பாளர், சித்தரடியார் சீ.மணி - 14/11/88**



சென்னை, காரனோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed by Kavin Printers, Madurai